المملكة العربية السعودية
وزارة التعليم العالي
الجامعة الإسلامية بالمدينة المنورة
عمادة البحث العلمي
قسم الترجمة
www.iu.edu.sa

# الأصول الثلاثة

## باللغة التاملية

ترجمة/ جواهر عبد الجواد

# இஸ்லாத்தின்மூன்றுஅடிப்படை வீடயங்கள் .

ஆசிரியர்

இமாம் முஹம்மத் பின் அப்துல் . வஹ்ஹாப் .

தமிழில்

அப்துல் ஜவாத் ஜவாஹிர .

## . பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் .

புனித இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவுவதற்கு விரும்பிய சில அடியார்களுக்கு மாத்திரம் அருள் பாலித்து,அவனைப்புறக்கணித்து வாழ்ந்தோரை வழி கேட்டில் வீழ்த்தி இருளிலே தத்தளிக்க வைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகட்டும் . ஸலவாத்தும் ஸலாமும் உலகத்தோர் அனைவருக்கும் அருளாகவும் , நபிமார்களில் இறுதியாகவும் , மக்கள் அனைவருக்கும் நற்சோபனம் கூறுபவராகவும் , அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் , அல்லாஹ்வின் அனுமதி பெற்று அவன் பால் அழைக்கும் அழைப்பாளராகவும் ஒளி வீசும் விளக்காகவும் அனுப்பப்பட்ட முஹம்மது பின் அப்துல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது உண்டாகட்டும் .

அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனிலே கூறுகின்றான் ...
"எவர் இஸ்லாம் அல்லாத வேறொரு மார்க்கத்தை தனது சமயமாக ஆக்கிக் கொள்கின்றாரோ அது அவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது . மேலும்

அவர் மறுமையில் நஷ்டமடைந்தோரில் உள்ளவராக ஆகி விடுவார்."

( ஆல இம்ரான் 85 ம் வசனம் )

எனவேதான் அல்லாஹ் இஸ்லாம் அல்லாத அனைத்து மார்க்கங்களும் நிராகரிக்கப்பட்டவைகளே எனத் தெளிவு படுத்தியுள்ளான் . அவற்றைத் தழுவுபவர்கள் நஷ்டவாளிகள் , தம்மைத் தாமே அழித்துக் கொள்பவர்கள்

எனினும் இன்று நாம் வாழும் காலத்தில் இருக்கும் அனேக மக்கள் காபிர்களாகவும் வழிகேட்டில் வீழ்ந்தவர்களாவுமே காணப்படுகின்றனர் . யூதர்கள் , கிருஷ்துவர்கள் , பௌத்தர்கள் , ஹிந்துக்கள் , சுயோனிஸ வாதிகள் நாஷ்தியர்கள் இன்னும் பல்வேறுவிதமான பெயர்களில் காபிர்களாகவே காணப்படுகின்றனர். எனவேதான் அல்லாஹ்வின் அருள்பெற்று நேவழியடைந்து இஸ்லாமிய அறிவு பெற்ற முஸ்லிம்கள் மேற்படி மக்களுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்து அவர்கள் முன்னிலையில் இஸ்லாத்தின் அத்தாட்சிகளைச் சமர்ப்பிப்பது கடமையாகும் . அதன் மூலம் அவர்கள் நேர்வழி பெற்று புனிதஇஸ்லாத்தைத் தழுவி விடக் கூடும் . த.:.வாப்பணியின் ஆரம்பப்படித்தரமாக அம்மக்களுக்கு நாம் அழைப்பு விடுக்கும் இஸ்லாத்தைப்

பற்றிய அறிமுகத்தை அவர்களுக்கு முன் வைக்கவேண்டியிருப்பதால் இச்சிறிய கையேடு இஸ்லாம் பற்றி சிறியதொரு அறிமுகத்தை முன்வைக்கப் போதுமானது . அல்லாஹ் இதனைப் பிரயோசனமுள்ளதாக்கி இதன் மூலம் மூடிக்கிடக்கும் இதயங்களுக்கும்,அடைக்கப்பட்டிருக்கும் செவிளுக்கும் குருடாயிருக்கும் விழிகளுக்கும் நேர்வழி காட்டி விடக் கூடும் .

இது ஒருபுறமிருக்க – எங்களது முஸ்லிம் சமுதாயத்திலேயே புதிதாக இஸ்லாத்தை ஏற்ற பலர் இருக்கின்றனர் . இக்கையேடு சிறிதாயிருப்பினும் கூட அவர்களுக்கும் தமது மார்க்க விடயங்களை அறிய இவ்வேடு உதவி செய்யும் . அதன் மூலம் இஸ்லாம் அவர்களது அடி மனதில் பதிந்து கொள்கைப் பிடிப்புள்ளவர்களாக அவர்கள் மாறக் கூடும் . அதன் பின் அவர்களும் இஸ்லாமிய ஜிஹாதின் கொடியை ஏந்தி தம்மைச் சூழவும் தமக்குப் பின்னும் உள்ள மக்களுக்கும் அவர்கள் இஸ்லாமிய அழைப்புப்பணி செய்ய ஆரம்பித்து விடுவார்கள் . எல்லாநன்மைகளும் இறைவன் கைவசமே உள்ளன . அவன் நாடிவர்களுக்கே அவற்றைக் கொடுப்பான் . வஸ்ஸலாம்

.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன்।

அல்லாஹ் உன் மீது அருள் புரிவானாக।

நான்கு விடயங்களை அறிவது நம்மீது கடமையாகும் என்பதை நீ அறிந்து கொள்.

<u>முதலாவது</u> அறிவு அதாவது அல்லாஹ்வையும் அவன் நபியையும்இஸ்லாமிய மார்க்கத்தையும் ஆதாரப்பூர்வமாக அறியத்தேவையான அறிவு.

<u>இரண்டாவது</u> அந்த அறிவின் படி அமல் செய்வது.

<u>மூன்றாவது</u> அதன்பால் மக்களை அழைப்பது.

<u>நான்காவது</u> இவ்வாறு அழைப்புக் கொடுக்கும் போது ஏற்படுகின்ற இன்னல்கள் மீது பொறுமை செய்வது .

இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறைவசனமாகும்.

﴿ بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ . وَٱلْعَصْرِ ﴿١﴾ إِنَّ ٱلْإِنسَٰنَ لَفِى خُسْرٍ ﴿٢﴾ إِلَّا ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَعَمِلُوا۟ ٱلصَّٰلِحَٰتِ وَتَوَاصَوْا۟ بِٱلْحَقِّ وَتَوَاصَوْا۟ بِٱلصَّبْرِ ﴿٣﴾ ﴾ [سورة العصر]

'காலத்தின் மீது ஆணையாக மனிதன் (தன் ஆயுளைவீணில் செலவு செய்து) நிச்சயமாக நஷ்டத்தி(ன் வழியி ) லிருக்கிறான். ஆயினும் எவர்கள் விசுவாசம்கொண்டு நற்கருமங்களைச் செய்துசத்தியத்தை ஒருவருக் கொருவர் உபதேசம் செய்து (பாவங்களை விடுவதிலும் நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படும் கஷ்டங்களைச்) சகித்துக் கொள்ளுமாறு ஒருவருக்கொருவர்உபதேசம் செய்துவந்தார்களே இவர்களைத்தவிர (மற்றவர்கள் நஷ்டவாளிகளாவார்கள் )

(ஸூறதுல் அஸ்ர் –1,3.)

இமாம் ஷாபியீ (ரஹ்) கூறினார்கள்...

அல்லாஹ் "அஸ்ர்" என்ற இந்த அத்தியாயத்தை மட்டும்இறக்கியிருந்தாலும், இந்த ஒரு அத்தியாயம் மட்டுமே தம் படைப்புகள் மீது (அவர்கள் செய்த தவறுகளுக்காக) ஆதாரம் எடுத்துக் கொள்வதற்குப் போதுமானதாகும்.

அந்த அளவிற்கு மிக முக்கியமான கருத்துக்களை இவ்வத்தியாயம் உள்ளடக்கியுள்ளது.

(அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதற்கு அறிவு மிக அவசியம் என்பதைக் குறிக்கும் வண்ணம்) இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள், "சொல், செயலிற்கு முன் அது பற்றிய அறிவு அவசியம்" என்ற ஒரு பாடத்தை ஒதுக்கி

அப்பாடத்தில் அறிவின் முக்கியத்துவத்தைக் குறிக்கின்ற ஹதீஸ்களைக்கூறியுள்ளார்கள்.
அறிவு எந்த அளவுற்கு அவசியம் என்பதைக் கீழ் காணும் இறை வசனம் தெளிவுபடுத்துகிறது.

﴿فَٱعْلَمْ أَنَّهُۥ لَآ إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَٱسْتَغْفِرْ لِذَنۢبِكَ﴾

[سورة محمد الآية 19]

(நபியே!) நிச்சயமாக அல்லாஹ்வைத்தவிர வேறு யாரும் வணக்கத்திற்கு தகுதியானவனல்ல என்பதை நீர் (உறுதியாக) அறிந்து கொண்டு உமக்காக பாவ மன்னிப்பு கோருவீராக! (ஸூறது முஹம்மது – 19 )

சொல் செயலுக்கு முன் அறிவைக்கொண்டு அல்லாஹ் ஆரம்பித்துள்ளான்.எனவே (சொல் செயலுக்கு முன் அதைப்பற்றிய அறிவு மிக அவசியமாகும்.
அல்லாஹ் உனக்கு அருள் புரிவானாக!
கீழ் காணும் மூன்று விடயங்களை அறிந்து அதன் படி அமல் செய்வது முஸ்லிமான ஒவ்வொரு ஆண், பெண் மீதும் கடமையானதாகும் என்று நீ அறிந்து கொள்.
1. நிச்சயமாக அல்லாஹ் நம்மைப் படைத்து நமக்கு உணவும் அளித்தான். அவன் நம்மை வீணாக

விட்டுவிடவில்லை. மாறாக, நமக்கு அவனுடைய தூதரையும் அனுப்பிவைத்தான், யார் அவர்களுக்கு வழிப்படுகின்றானோ அவன் சுவர்க்கம் செல்வான்,யார் அவர்களுக்கு மாறு செய்வானோ அவன் நரகம் புகுவான். அதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿إِنَّآ أَرْسَلْنَآ إِلَيْكُمْ رَسُولًا شَٰهِدًا عَلَيْكُمْ كَمَآ أَرْسَلْنَآ إِلَىٰ فِرْعَوْنَ رَسُولًا ﴿١٥﴾ فَعَصَىٰ فِرْعَوْنُ ٱلرَّسُولَ فَأَخَذْنَٰهُ أَخْذًا وَبِيلًا ﴿١٦﴾﴾ [سورة المزمل]

(மனிதர்களே!) நிச்சயமாக நாம் உங்களிடம் (நம்முடைய) ஒரு தூதரை அனுப்பி வைத்தோம், (மறுமையில்) அவர் உங்களுக்கு சாட்சியாக வருவார்.இவ்வாறே பிர்அவ்னிடமும் முன்னர் ஒரு தூதரை நாம் அனுப்பி வைத்தோம் எனினும் பிர்அவ்ன் அத்தூதருக்கு மாறு செய்தான். ஆகவே, நாம் அவனை பலமாக பிடித்தக் கொண்டோம்.

ஸூறதுல் முஸ்ஸம்மில் –16.

உ.இறைவனால் அனுப்பப்பட்ட நபியாக இருந்தாலும் சரி. அல்லது அவனோடு நெருங்கிய மலக்காக இருந்தாலும்

சரி,இறைவனுக்கு செலுத்த வேண்டிய வணக்க வழிபாடுகளில் அவனோடு யாரையும் இணைவைப்பதை அல்லாஹ் நிச்சயமாக விரும்பமாட்டான்.
இதற்குக் ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿ وَأَنَّ ٱلْمَسَٰجِدَ لِلَّهِ فَلَا تَدْعُوا۟ مَعَ ٱللَّهِ أَحَدًا ۝١٨ ﴾

[سورة الجن]

" நிச்சயமாக மஸ்ஜிதுகளெல்லாம் அல்லாஹ்வி (ன் வணக்கத்தி)ற்காகவே உள்ளன. ஆகவே (அவைகளில்) அல்லாஹ்வுடன் மற்றெவரையும் (வணங்க, பெயர் கூறி அழைக்காதிர்கள்." ஸூறதுல் ஜின் –18.

3.அல்லாஹ் ஒருவனே வணக்கத்திற்கு தகுதியானவன் என நம்பி,அவனது தூதருக்கு வழிப்படுபவன் தனது நெருங்கிய குடும்பத்தினர் களாக இருப்பினும் சரி,அல்லாஹ், அவனது தூதரின் விரோதிகள் யாரையும் தனது காரிய பரிபாலராக ஆக்கிக் கொள்வது கூடாது.
இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

لَّا تَجِدُ قَوْمًا يُؤْمِنُونَ بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْءَاخِرِ يُوَآدُّونَ مَنْ حَآدَّ ٱللَّهَ
وَرَسُولَهُۥ وَلَوْ كَانُوٓا۟ ءَابَآءَهُمْ أَوْ أَبْنَآءَهُمْ أَوْ إِخْوَٰنَهُمْ أَوْ عَشِيرَتَهُمْ ۚ
أُو۟لَٰٓئِكَ كَتَبَ فِى قُلُوبِهِمُ ٱلْإِيمَٰنَ وَأَيَّدَهُم بِرُوحٍ مِّنْهُ ۖ وَيُدْخِلُهُمْ
جَنَّٰتٍ تَجْرِى مِن تَحْتِهَا ٱلْأَنْهَٰرُ خَٰلِدِينَ فِيهَا ۚ رَضِىَ ٱللَّهُ عَنْهُمْ
وَرَضُوا۟ عَنْهُ ۚ أُو۟لَٰٓئِكَ حِزْبُ ٱللَّهِ ۚ أَلَآ إِنَّ حِزْبَ ٱللَّهِ هُمُ ٱلْمُفْلِحُونَ ﴿٢٢﴾

[سورة المجادلة

**(நபியே!) எந்த ஜனங்கள் அல்லாஹ்வையும், மறுமை நாளையும்(உண்மையாகவே விசுவாசங்கொண்டுள்ளார் களோ, அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும்மாறுசெய்கின்றவர்களை நேசிக்கமாட் டார்கள். அவர்கள் தங்களுடைய மூதாதைகளாயிருந்த போதிலும், அல்லது தங்களுடைய சகோதரர்களாக இருந்தபோதிலும், அல்லது தங்களுடைய இனபந்துகளாக இருந்தபோதிலும் அவர்களுடன் இவர்கள் உறவாடுவதை நீர் காணமாட்டீர். இத்தகையோர் தாம் இவர்களுடைய இருதயங்களில் அல்லாஹ் விசுவாசத்தைப் பதியவைத்து தன்னுடைய சக்தி யைக்கொண்டும்இவர்களைப் பலப்படுத்தி**

வைத்துள்ளான். சதா நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கும் சுவனபதிகளிலும் இவர்களைப் புகுத்தி விடுவான், அவற்றில் என்றென்றும் இவர்கள் தங்கிவிடுவார்கள்.இவர்களைப்பற்றி அல்லாஹ் திருப்தியடைந்தான்.அவர்களும்அவனைப்பற்றி திருப்தி யடைந்தார்கள். இவர்கள்தான் அல்லாஹ்வின் கூட்டத்தினர்கள் ,நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தி னர்கள்தான் சித்தியடைந்தோர்கள் என்பதை (நபியே) நீர் அறிந்து கொள்ளும்.

ஸூறதுல் முஜாதலா – ௨௨.

அல்லாஹ்வை வணங்க அவன் உனக்கு நேர் வழி காட்டுவானாக।

(மில்லதே ஹனீபிய்யா) (1) என்ற இப்றாஹீம்(அலை) அவர்களுடைய தூய்மையான மார்க்கம் என்பது , அல்லாஹ் ஒருவனை மட்டும் தூய்மையாக, கலங்கமின்றி வணங்குவதாகும். (வணக்க வழிபாட்டில் எதையும் அல்லாஹ் அல்லாதவருக்கு செய்தல் கூடாது). இதையே அல்லாஹ் உலக மனிதர்கள் அனைவர்களக்கும்

கட்டளையிட்டுள்ளான். இதற்காகவே மனிதர் களையும் அல்லாஹ் படைத்தான் என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும்.

(1)(உலகிலுள்ள எல்லா மதங்களையும் விட்டு விட்டு ஏக தெய்வக் கொள்கை எனும்'தவ்ஹீதை" மெய்ப்பிக்கின்ற இஸ்லாமிய மார்க்கத்திற்கே "மில்லத் ஹனீபிய்யா" எனக் கூறப்படும்.

இது பற்றி அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்,

﴿ وَمَا خَلَقْتُ ٱلْجِنَّ وَٱلْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ﴿٥٦﴾ ﴾ [سورة الذاريات]

“(எனக்கு வழிப்பட்(டு) என்னை வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை”. ஸூறதுத்தாரியாத் – 56.

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள “இறைவனை வணங்குவதற்காக” என்பதின் பொருள் யாதெனில், அல்லாஹ் ஒருவனை மட்டும் வணங்கி, வணக்கத்தால் அவனை ஒருமைப்படுத்துவதாகும்.

“தவ்ஹீத்” எனும் ஏக தெய்வக் கொள்கையே அல்லாஹ்வின் கட்டளைகளில் மிகப்பெரியதும் முக்கியமானதுமாகும்.அதாவது அல்லாஹ் ஒருவனே வணக்கத்திற்குத் தகுதியானவன், என்று வணக்கத்தால் அவனை ஒருமைப்படுத்து வதாகும் .

அல்லாஹ் விலக்கியவற்றில் மிகப்பெரிய தென்னவெனில், “ஷிர்க்” எனும் இணை வைத்தலாகும். அதாவது அல்லாஹ்வுடன் அவன் அல்லாதவர்களையும் அழைத்து உதவி தேடுவதாகும்.

இதற்கு ஆதாரம் பின்வரும் இறைவசனமாகும்.

﴿ وَٱعْبُدُواْ ٱللَّهَ وَلَا تُشْرِكُواْ بِهِۦ شَيْـًٔا ﴿١١١﴾ ﴾

[سورة النساء الآية 36]

"அல்லாஹ்வையே வணங்குங்கள்.அவனுக்கு யாதொ ன்றையும்இணையாக்காதீர்கள்.
. அன்னிஸா,36.

# மூன்று அடிப்படை விடயங்கள்

ஒவ்வொரு மனிதனும் கண்டிப்பாக அறிய வேண்டிய விடயம் என்னவென்று உன்னிடம் கேட்கப்பட்டால், நீ சொல்.....

ஒருவன் தன் இறைவனையும், அவன் மார்க்கத்தையும், அவனது நபி முஹம்மது(ஸல்) அவர்களைப்பற்றியும் அறிவதாகும்.

# முதலாவது அடிப்படை விடயம்.

**அல்லாஹ்வை அறிவதாகும்.**

உன்னுடைய இறைவன் யார் என்று உன்னிடம் கேட்கப்பட்டால் நீ சொல்,

என்னையும் உலகத்திலுள்ள அனைவர்களையும் தனது அருட்கொடையால் வளர்த்து பரிபாலிப்பவனே எனது இறைவன். அவன்தான் நான் வணங்குவதற்கு தகுதியானவன். நான் வணங்குவதற்கு தகுதியானவன் அவனைத்தவிர வேறு யாருமில்லை, என நீ பதில் கூறவேண்டும்.

இதற்கு ஆதாரம் பின்வரும் இறைவசனமாகும்.

ٱلْحَمْدُ لِلَّهِ رَبِّ ٱلْعَٰلَمِينَ ﴿٢﴾ [سورة الفاتحة]

"அகிலங்கள் அனைத்தையும் படைத்துப் போஷித்துப் பரிபக்குவப்படுத்துகின்ற அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்" . அல் பாத்திஹா 1.

அல்லாஹ்வைத்தவிர மற்ற படைப்பினங்கள் எல்லாவற்றிற்கும் சிருஷ்டி என்று சொல்லப்படும். அந்த சிருஷ்டிகளில் நானும் ஒருவன் என்று நீ கூறு.

உன்னுடைய இறைவனை நீ எப்படி அறிந்து கொண்டாய்? என உன்னிடம் கேட்கப்படும் போது பின் வருமாறு கூறவேண்டும்.

இறைவனின் அத்தாட்சிகளைக் கொண்டும், அவன் படைப்பினங்களை சிந்திப்பதன் மூலமும் அவனை அறிந்தேன். இரவும் பகலும் சூரியனும் சந்திரனும் அவன் அத்தாட்சிகளாகும். வானங்கள், பூமி, பிரபஞ்சம் அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவைகளாகும். (எனவே இவைகளைப் படைத்தவனே என் இறைவன்).

இதற்கு ஆதாரம் கீழ் வரும் இறை வசனமாகும்.

﴿ وَمِنْ ءَايَٰتِهِ ٱلَّيْلُ وَٱلنَّهَارُ وَٱلشَّمْسُ وَٱلْقَمَرُ ۚ لَا تَسْجُدُوا۟ لِلشَّمْسِ وَلَا لِلْقَمَرِ وَٱسْجُدُوا۟ لِلَّهِ ٱلَّذِى خَلَقَهُنَّ إِن كُنتُمْ إِيَّاهُ تَعْبُدُونَ ﴿٣٧﴾ ﴾

[سورة فصلت]

“இரவும், பகலும், சூரியனும், சந்திரனும் (இறைவனை அறிவிக்கக்கூடிய) அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். ஆகவே உண்மையாகவே நீங்கள் அல்லாஹ்வையே வணங்குபவர்களாயிருந்தால் சூரியனுக்கும், சந்திரனுக்கும் சிரம் பணியாதீர்கள். இவைகளை சிருஷ்டித்தவன் எவனோ அவனுக்கே சிரம் பணியுங்கள்.என்றும் நபியே நீர் கூறவீராக!

ஹாமீம் ஸஜ்தா – 37.

மேலும் இறை வசனம் கூறுவதாவது

﴿ وَمِنْ ءَايَٰتِهِ ٱلَّيْلُ وَٱلنَّهَارُ وَٱلشَّمْسُ وَٱلْقَمَرُ ۚ لَا تَسْجُدُوا۟ لِلشَّمْسِ وَلَا لِلْقَمَرِ وَٱسْجُدُوا۟ لِلَّهِ ٱلَّذِى خَلَقَهُنَّ إِن كُنتُمْ إِيَّاهُ تَعْبُدُونَ ﴿٣٧﴾ ﴾

[سورة فصلت]

"நிச்சயமாக உங்கள் இரட்சகன் அல்லாஹ்தான், அவன் எத்தகையவனென்றால் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான் பின்னர் (தன் கண்ணியத்திற்கு தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீது நிலை பெறுவது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலை பெற்று) விட்டான். அவனே இரவால் பகலை மூடுகின்றான்.அது தீவீரமாக அதனை பின் தொடர்கிறது. இன்னும் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் தன் கட்டளைக்கு வசப்படுத்தப்பட்டதாகப்(படைத்திருக்கிறான்)படைத்த லும், கட்டளையும் அவனுக்கே உரியதெனத்தெரிந்து கொள்ளுங்கள், அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் மகத்துவமுடையவனாயிருக்கினறான்.

அல் அ.:.ராப் – 54.

(உலகத்தாரையும் அதிலுள்ளவற்றையும்) இரட்சித்துப் பரிபாலிக்கக்கூடியவனே வணக்கத்திற்குத் தகுதியானவன்.

இதற்கு ஆதாரம் கீழ் காணும்இறைவசனமாகும்.

﴿ وَمِنْ ءَايَـٰتِهِ ٱلَّيْلُ وَٱلنَّهَارُ وَٱلشَّمْسُ وَٱلْقَمَرُ ۚ لَا تَسْجُدُوا۟ لِلشَّمْسِ وَلَا لِلْقَمَرِ وَٱسْجُدُوا۟ لِلَّهِ ٱلَّذِى خَلَقَهُنَّ إِن كُنتُمْ إِيَّاهُ تَعْبُدُونَ ﴿٣٧﴾ ﴾

[سورة فصلت

மனிதர்களே! நீங்கள், உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள்(அதனால்) நீங்கள் பரிசுத்தவான்களாகலாம் .

அவனே உங்களுக்கு பூமியை வசிக்கும் இடமாகவும், வானத்தை ஒரு முகடாகவும் அமைத்து, மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து , அதனைக் கொண்டு அதன் மூலம் உங்களுக்கு உணவாகக்கூடிய கனிவர்க்கங் களையும் உங்களுக்கு வெளிப்படுத்துகிறான். ஆகவே (இவைகளையெல்லாம்) நீங்கள் (தெளிவாக) அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு (எத்தகைய) இணைகளையும் ஏற்படுத்தாதீர்கள். அல் பகரா – 21, 22.

இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்,
மேற்கூறப்பட்ட இறைவசனத்தில் உள்ளவைகளைப் படைத்தவனே வணக்கத்திற்குத் தகுதியானவன். இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் எனும் (கருணை) இவைகள்

அல்லாஹ்வால் கட்டளையிடப்பட்ட வணக்கங்களாகும். இந்த வணக்கங்களின் வகையைச் சார்ந்ததுதான் பிரார்த்தனை, பயம், ஆதரவு, பொறுப்புச்சாட்டல்,
ஆசை வைத்தல், பக்தி பூர்வமான பயம், உள்ளச்சம், பச்சாத்தாபம், உதவி தேடல், காவல்தேடல், குர்பானி கொடுத்தல் மற்றும் நேர்ச்சை,செய்தல் போன்றவைகளும்,மேலும், இவை அல்லாத அல்லாஹ்வால் கட்டளையிடப்பட்ட வணக்க வகைகள் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தமானதாகும்.
இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿ وَأَنَّ ٱلْمَسَٰجِدَ لِلَّهِ فَلَا تَدْعُواْ مَعَ ٱللَّهِ أَحَدًا ﴿١٨﴾ ﴾ [سورة الجن]

“நிச்சயமாக மஸ்ஜிதுகளெல்லாம் அல்லாஹ்வி(ன் வணக்கத்தி) ற்காகவே உள்ளன. ஆகவே (அவைகளில்) அல்லாஹ்வுடன் மற்றெவரையும் (வணங்க, பெயர் கூறி) அழைக்காதீர்கள்.”

அல் ஜின் – 18.

மேல் கூறப்பட்ட வணக்க வழிபாடுகளின் வகைகளில் எதையேனும் அல்லாஹ் அல்லாதவர்களுக்கு செய்பவன் இறைவனுக்கு இணை வைத்தவனாக, காபிராக ஆகிவிடுகிறான்.
இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

وَمَن يَدۡعُ مَعَ ٱللَّهِ إِلَٰهًا ءَاخَرَ لَا بُرۡهَٰنَ لَهُۥ بِهِۦ فَإِنَّمَا حِسَابُهُۥ عِندَ رَبِّهِۦٓۚ إِنَّهُۥ لَا يُفۡلِحُ ٱلۡكَٰفِرُونَ ﴿١١٧﴾ [سورة المؤمنون]

“(நபியே!) எவன் அல்லாஹ்வுடன் வேறு நாயனை (வணக்கத்திற்கு தகுதியானவனெனக் கருதி) அழைக்கின்றானோ அவனிடத்தில் அதற்குரிய யாதொரு அத்தாட்சியும் இல்லை. அவனுடைய (பாவக்) கணக்கு அவனுடைய இறைவனிடத்தில் தான் (தீர்க்கப்படும்). நிச்சயமாக (உண்மையை) நிராகரிக்கும் இத்தகையோர் சித்திபெறவே மாட்டார்கள்.” அல் மு:மினூன் – 117

ஹதீஸில் வந்துள்ளதாவது,

“துஆ என்பது வணக்கங்களின் மூளையாகும்”.

மேலும் இறைவன் கூறும் ஆதாரமாவது ,

وَقَالَ رَبُّكُمُ ٱدۡعُونِيٓ أَسۡتَجِبۡ لَكُمۡۚ إِنَّ ٱلَّذِينَ يَسۡتَكۡبِرُونَ عَنۡ عِبَادَتِي سَيَدۡخُلُونَ جَهَنَّمَ دَاخِرِينَ ﴿٦٠﴾ [سورة غافر]

உங்களிறைவன் கூறுகிறான்.. நீங்கள் என்னையே அழை(த்துப் பிரார்த்தி) யுங்கள் . நான் உங்களு(டைய பிரார்த்தனை)க்கு பதிலளிப்பேன் எவர்கள் என்னை வணங்காது பெருமையடிக்கின்றனரோ அவர்கள் ,நிச்சய

மாக சிறுமைப்பட்டவர்களாக நரகம் புகுவர். அல்மு.:.மின் – 60.

<u>பயம்..</u>

அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும். (அஞ்சவேண்டும்) என்பதற்கு கீழ் காணும் இறை வசனம் ஆதாரமாகும்.

وَقَالَ رَبُّكُمُ ٱدۡعُونِيٓ أَسۡتَجِبۡ لَكُمۡۚ إِنَّ ٱلَّذِينَ يَسۡتَكۡبِرُونَ عَنۡ عِبَادَتِي سَيَدۡخُلُونَ جَهَنَّمَ دَاخِرِينَ ﴿٦٠﴾ [سورة غافر]

"விசுவாசிகளே நீங்கள் உண்மை விசுவாசிகளாக இருந்தால் அவர்களுக்குப் பயப்பட வேண்டாம். எனக்கே பயப்படுங்கள்.
ஆல இம்றான் – 175.

(அதாவது அல்லாஹ்வை அஞ்சிப் பயப்படுவது போன்று படைப்பினங்களில் யாரையும், எதையும் பயப்படுவது கூடாது.)

## ஆதரவு வைத்தல்..

அல்லாஹ் ஒருவனிடமே ஆதரவு வைக்க வேண்டும் என்பதற்கு ஆதாரம் கீழ்காணும் இறைவசனமாகும்.

﴿فَمَن كَانَ يَرۡجُواْ لِقَآءَ رَبِّهِۦ فَلۡيَعۡمَلۡ عَمَلٗا صَٰلِحٗا وَلَا يُشۡرِكۡ بِعِبَادَةِ رَبِّهِۦٓ أَحَدَۢا ١١٠﴾ [سورة الكهف]

“ஆகவே, எவன் தன் இறைவனை சந்திக்க விரும்புகிறானோ அவன் நற் கருமங்களைச்செய்து, தன் இறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது (அவனையே) வணங்கி வருவானாக.” அல் கஹ்.:.ப் – 110.

## பாரம் சாட்டல்..

அல்லாஹ் ஒருவனிடமே நம் காரியங்களை பாரம் சாட்ட வேண்டும் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿ وَعَلَى ٱللَّهِ فَتَوَكَّلُوٓاْ إِن كُنتُم مُّؤۡمِنِينَ ٢٣﴾ [سورة المائدة 23]

“நீங்கள் (உண்மை) விசுவாசிகளாக இருந்தால் அல்லாஹ்விடமே உங்கள் காரியங்களை பாரம் சாட்டுங்கள் .”

மேலும் கூறுகிறான்..

وَمَن يَتَوَكَّلۡ عَلَى ٱللَّهِ فَهُوَ حَسۡبُهُۥٓۚ ﴾ [سورة الطلاق 3]

“எவர் அல்லாஹ்வை (முற்றிலும்) நம்புகின்றாரோ, அவருக்கு அவனே (முற்றிலும்) போதுமானவன்.” அத்தலாக் – 3.

## ஆசை வைத்தல்,பக்திபூர்வமான பயம், உள்ளச்சம்.

இவைகள் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே செய்ய வேண்டும் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

...إِنَّهُمْ كَانُوا۟ يُسَـٰرِعُونَ فِى ٱلْخَيْرَٰتِ وَيَدْعُونَنَا رَغَبًا وَرَهَبًا ۖ وَكَانُوا۟ لَنَا خَـٰشِعِينَ ﴿٩٠﴾ [سورة الأنبياء]

"…..நிச்சயமாக இவர்கள் யாவரும் , நன்மையான காரியங்களை செய்வதில் ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டிருந்தார்கள். (நம்முடைய அருளை) விரும்பியும் (நம் தண்டனைக்குப்) பயந்தும் நம்மிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள்.இவர்கள் யாவரும் நம்மிடம் மிக்க உள்ளச்சமுடையவர்களாக இருந்தார்கள்"

அல் அன்பியா – 90.

## உள்ளச்சம்.

...فَلَا تَخۡشَوۡهُمۡ وَٱخۡشَوۡنِي ﴾ [سورة البقرة 150]

"...அவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். எனக்கே நீங்கள் பயப்படுங்கள்.(அப்போது) என்னுடைய அருட்கொடையை நான் உங்கள் மீது பூரணமாக்கி வைப்பேன். (அதனால்) நீங்கள் நேரான வழியை அடையலாம்." அல் பகரா – 150.

## பாவ மன்னிப்புக் கோரல்

பாவ மன்னிப்புக் கோருதல் அல்லாஹ் ஒருவனிடமே செய்ய வேண்டும் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

وَأَنِيبُوٓاْ... إِلَىٰ رَبِّكُمۡ وَأَسۡلِمُواْ لَهُۥ ﴾ [سورة الزمر 54]

"மனிதர்களே! உங்களை வேதனை வந்தடைவதற்கு முன்னதாகவே நீங்கள் உங்கள் இறைவன்பால் திரும்பி அவனுக்கு முற்றிலும் வழிப்பட்டு நடவுங்கள். (வேதனை வந்து விட்டாலோ) பின்னர் (ஒருவராலும்) நீங்கள் உதவி செய்யப்படமாட்டீர்கள்". அஸ்ஸுமர் – 54.

## உதவி தேடல்.

அல்லாஹ் ஒருவனிடமே உதவி தேட வேண்டும் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறைவசனமாகும்.

﴿ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِينُ ۝٥ ﴾ [سورة الفاتحة]

"(இறைவனே!) உன்னையே நாங்கள் வணங்குகிறோம். உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்."

அல் பாத்திஹா – 5.

ஹதீஸில் வந்துள்ளதாவது,

நீ உதவி தேடும் போது அல்லாஹ் ஒருவனிடமே உதவி தேடு.

## பாதுகாவல் தேடுதல்..

அல்லாஹ் ஒருவனைக்கொண்டே காவல் தேட வேண்டும் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿ قُلۡ أَعُوذُ بِرَبِّ ٱلنَّاسِ ۝١ مَلِكِ ٱلنَّاسِ ۝٢ ﴾ [سورة الناس]

(நபியே! பிரார்த்தனை செய்து) நீர் கூறுவீராக!

மனிதர்களை இரட்சித்துப் பரிபாலிப்பவனும், மனிதர்களின் (உண்மையான அரசனுமான) அல்லாஹ்விடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.

அந்நாஸ் – 1,2.

## அபயம் தேடல் .

அல்லாஹ் ஒருவனிடமே அபயம் தேட வேண்டும் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿إِذْ تَسْتَغِيثُونَ رَبَّكُمْ فَاسْتَجَابَ لَكُمْ﴾ [سورة الأنفال 9]

"(உங்களைப்)" பாதுகாத்துக்கொள்ளுமாறு நீங்கள் உங்கள் இறைவனிடம் கோரிய போது அணி அணியாக (உங்களைப்பின்பற்றி வரக்கூடிய) ஆயிரம் மலக்குகளைக்கொண்டு நிச்சயமாக நான் உங்களுக்கு உதவி செய்வேன் என்று அவன் உங்களுக்கு பதிலளித்தான்" அல் அன்:ஃபால் – 9.

## குர்பானி (அறுத்துப்பலியிடல்)

அல்லாஹ் ஒருவனுக்கே அறுத்து குர்பானி கொடுக்க வேண்டும் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ ﴿١٦٢﴾ لَا شَرِيكَ لَهُ وَبِذَٰلِكَ أُمِرْتُ وَأَنَا أَوَّلُ الْمُسْلِمِينَ﴾ [سورة الأنعام]

"நபியே நீர் கூறுவீராக! நிச்சயமாக என்னுடைய தொழுகையும், என்னுடைய தியாகமும், என் வாழ்வும், என் மரணமும் உலகத்தைப்படைத்துப் போஷித்துப்

பரிபக்குவப்படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை. அவனுக்கு யாதோர் இணையுமில்லை (துணையுமில்லை) இவ்வாறே நான் ஏவப்பட்டுள்ளேன்.ஆகவே (அவனுக்கு வழிப்பட்ட) முஸ்லீம்களில் நான் முதன்மையானவன் (என்றும் கூறுவீராக)." அல்அன்ஆம் – 162,163.

ஹதீஸிலிருந்து ஆதாரம்,

அல்லாஹ் அல்லாதவர்களுக்கு அறுத்துப் பலியிடுபவனை (குர்பானி கொடுப்பவனை) அல்லாஹ் சபிக்கின்றான் என பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

## நேர்ச்சை .

அல்லாஹ் ஒருவனுக்கே நேர்ச்சை செய்ய வேண்டும் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறைவசனமாகும்.

﴿يُوفُونَ بِٱلنَّذۡرِ وَيَخَافُونَ يَوۡمٗا كَانَ شَرُّهُۥ مُسۡتَطِيرٗا ۝٧﴾ [سورة الإنسان]

...இவர்கள் (தங்கள் இறைவனுக்குச் செய்த ) நேர்ச்சைகளையும் நிறைவேற்றி வைத்தனர். நீண்ட வேதனையுடைய நாளையும் பயந்து கொண்டிருந்தனர். அத்தஹ்ரு – 7.

## இரண்டாவது அடிப்படை வீடயம்.

இஸ்லாமிய மார்க்கத்தை ஆதாரங்கள் மூலம் அறிந்து கொள்வது.அதாவது ஏக தெய்வ கொள்கையை நம்பி அல்லாஹ்விற்கு சிரம் சாய்ப்பது, மேலும் அவன் கட்டளைகளுக்கு வழிப்பட்டு, இணைவைப்பையும் இணைவைப்பவர்களையும் விட்டு விலகிக் கொள்வது.

இவ்வாறு அறிவது மூன்று பிரிவுகளாகும்.

(1) இஸ்லாம்.

(௨) ஈமான்.

(3) இஹ்ஸான். (கருணை)

(இஹ்ஸான் என்பது அல்லாஹ்வை நாம் காண்பது போன்று அவனுக்கு வழிப்படுவது.)

## முதல் பிரிவு (நிலை)....இஸ்லாம்.

இஸ்லாத்தின் தூண்கள், அடிப்படைக் கடமைகள் ஐந்து.

1.வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத்தவீர வேறு யாருமில்லை .அவன் திருத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களாகும். என நம்பி சாட்சி சொல்வது (சான்று பகர்வது).

௨.தொழுகையை சரிவர நிலைநாட்டுவது.

3. ஸகாத் கொடுப்பது.

4. ரமலான் மாதம் முழுவதும் நோன்பு நோற்பது.
5. க.:.பதுல்லாவிற்கு சென்று ஹஜ் செய்வது.

திருக்கலிமாவை மொழிந்து நம்புவது இஸ்லாமிய கடமைகளில் ஒன்று என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

شَهِدَ ٱللَّهُ أَنَّهُۥ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ وَٱلْمَلَٰٓئِكَةُ وَأُو۟لُوا۟ ٱلْعِلْمِ قَآئِمًۢا بِٱلْقِسْطِ ۚ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ ٱلْعَزِيزُ ٱلْحَكِيمُ ﴿١٨﴾ [سورة آل عمران]

(நபியே!) அல்லாஹ் சாட்சி கூறுகிறான். ﴿

அல்லாஹ் சாட்சி கூறுகின்றான் .நிச்சயமாக அவனைத்தவிர வணக்கத்திற்கு தகுதியானவன் யாருமில்லை. அன்றி(அவ்வாறே) மலக்குகளும், (வேத ஞானம் பெற்ற) கல்விமான்களும் நீதத்தை நிலை நிறுத்தி அவனைத்தவிர வேறு நாயனில்லை.(அவன் யாவரையும்) மிகைத்தவன் ஞானமுடையவன் (என்று சாட்சி கூறுகின்றனர்.) ஆல இம்றான் – 18.

இந்த திரு வசனத்தின் விளக்கம் என்னவெனில் உண்மையாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாருமில்லை என நம்பி அல்லாஹ்வைத்தவிர வணங்கப்படும் போலி தெய்வங்கள் அனைத்தும் வணக்கத்திற்கு தகுதியற்றவை அல்லாஹ் ஒருவனே வணக்கத்திற்கு தகுதியானவன், அவனது

வணக்கத்திலும் அவன் ஆட்சியிலும் அவனுக்கு இணை யாருமில்லை என்ற உறுதிப்பாட்டை எடுத்துக் கொள்வ –தாகும்.

இந்த வசனத்தை கீழ் காணும் வசனம் விளக்குகிறது.

﴿ وَإِذْ قَالَ إِبْرَٰهِيمُ لِأَبِيهِ وَقَوْمِهِۦٓ إِنَّنِى بَرَآءٌ مِّمَّا تَعْبُدُونَ ﴿٢٦﴾ إِلَّا ٱلَّذِى فَطَرَنِى فَإِنَّهُۥ سَيَهْدِينِ ﴿٢٧﴾ وَجَعَلَهَا كَلِمَةًۢ بَاقِيَةً فِى عَقِبِهِۦ لَعَلَّهُمْ يَرْجِعُونَ ﴿٢٨﴾ ﴾ [ سورة الزخرف]

"(நபியே! இப்றாஹீம் தன்னுடைய தந்தையையும், ஜனங்களையும் நோக்கி நிச்சயமாக நான் நீங்கள் வணங்குபவைகளை விட்டும் விலகிக் கொண்டேன்.எவன் என்னை சிருஷ்டித்தானோ, அந்த அல்லாஹ்வைத்தவிர (அவனையே நான் வணங்குவேன்) நிச்சயமாக அவனே எனக்கு நேரான வழியை அறிவிப்பான் என்று கூறியதை நினைத்துப்பாரும்.

ஆகவே (அவருடைய சந்ததிகளாகிய இந்த அரபிகளும் நம்மிடமே) திரும்பி வரும் பொருட்டு அவர் தன்னுடைய சந்ததிகளில் இக் கொள்கையை நிலையான வாக்காக ஆக்கிவிட்டார். அல் ஜுக்ருஃப் – 26,28.

மேலும் அல்லாஹ்வுடைய திருவசனமாவது…

﴿ قُلْ يَـٰٓأَهْلَ ٱلْكِتَـٰبِ تَعَالَوْا۟ إِلَىٰ كَلِمَةٍ سَوَآءٍۭ بَيْنَنَا وَبَيْنَكُمْ أَلَّا نَعْبُدَ إِلَّا ٱللَّهَ وَلَا نُشْرِكَ بِهِۦ شَيْـًٔا وَلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا أَرْبَابًا مِّن دُونِ ٱللَّهِ ۚ فَإِن تَوَلَّوْا۟ فَقُولُوا۟ ٱشْهَدُوا۟ بِأَنَّا مُسْلِمُونَ ﴿٦٤﴾ ﴾[سورة آل عمران]

“நபியே நீர் கூறுவீராக! வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் (சம்மதமான) ஒரு மத்திய விடயத்தின் பால் வருவீர்களாக (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்க மாட்டோம். நாம் அவனுக்கு யாதொன்றையும் இணையாக்க மாட்டோம். நம்மில் எவரும் அல்லாஹ்வையன்றி எவரையும் வணங்கமாட்டோம் (என்று கூறுவீராக, விசுவாசிகளே!) இதனையும் அவர்கள் புறக்கணித்தால்(அவர்களை நோக்கி) நிச்சயமாக நாங்கள் (அவன் ஒருவனுக்கே முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லீம்கள் என்று நீங்கள் சாட்சியங் கூறுவீர்களாக! என்று நீங்கள் கூறிவிடுங்கள்.” ஆல இம்றான் – 64.

முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்பதற்கு கீழ் காணும் இறை வசனம் ஆதாரமாகும்.

﴿ لَقَدۡ جَآءَكُمۡ رَسُولٞ مِّنۡ أَنفُسِكُمۡ عَزِيزٌ عَلَيۡهِ مَا عَنِتُّمۡ حَرِيصٌ عَلَيۡكُم بِٱلۡمُؤۡمِنِينَ رَءُوفٞ رَّحِيمٞ ١٢٨ ﴾ [سورة التوبة]

(விசுவாசிகளே!) உங்களிலிருந்து நிச்சயமாக (நம்முடைய) ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார்(உங்களுக்கு யாதொரு துன்பம் ஏற்பட்(டு) நீங்கள் கஷ்டத்திற்குள்ளாகி விட்டால் அது அவருக்கு மிக்க வருத்தமாகவே இருக்கும். (அவ்வளவு தூரம் அவர் உங்கள் மீது அன்புடையவர்) அன்றி உங்க(ள் நன்மைக) ளைப்பெரிதும் விரும்புகின்றவராகவும், விசுவாசிகளாகிய உங்கள் மீது மிக்க அன்பும் கிருபையும் உடையோராகவும் இருக்கின்றார். அத்தவ்பா 128

பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதராகும் என சாட்சி கூற வேண்டும் என்பதன் பொருள்,அவர்கள் ஏவிய கட்டளைகளுக்கு வழிப்பட்டு ,அவர்கள் அறிவித்தவைகளை மெய்ப்படுத்தி, அவர்கள் விலக்கி வெறுத்தவைகளை விட்டும் ஒதுங்கி, அவர்கள் காண்பித்துத் தந்தது போன்று அல்லாஹ்வை வணங்குவதாகும். (வணக்க வழிபாடுகளில் அவர்கள் காண்பித்துத்தந்த வழி முறைகளை விட்டு மனம் போன போக்கில் செயல் படுவது கூடாது).

தொழுகை, ஸகாத் இவைகளுக்கு ஆதாரமாகவும், ஏக தெய்வக்கொள்கையின் விளக்கமாகவும் கீழ் காணும் இறைவசனம் அமைந்துள்ளது.

﴿ وَمَآ أُمِرُوٓاْ إِلَّا لِيَعۡبُدُواْ ٱللَّهَ مُخۡلِصِينَ لَهُ ٱلدِّينَ حُنَفَآءَ وَيُقِيمُواْ ٱلصَّلَوٰةَ وَيُؤۡتُواْ ٱلزَّكَوٰةَۚ وَذَٰلِكَ دِينُ ٱلۡقَيِّمَةِ ﴾ ٥ [سورة البينة]

"அல்லாஹ்வுடைய கலப்பற்ற மார்க்கத்தையே பின்பற்றி(மற்ற மார்க்கங்களை) புறக்கணித்து அல்லாஹ் ஒருவனையே வணங்கி, தொழுகையையும் கடைப்பிடித்து ஸகாத்தும் கொடுத்து வருமாறேயன்றி(வேறெதுவும் இத் தூதா மூலம் வேதத்தையுடையவா்களுக்கு ஏவப்படவில்லை. இதுதான் நிலையான (சட்டங்களுடைய) மார்க்கமாகும்."

அல் பய்யினா – 5.

நோன்பு கடமை என்பதற்கு கீழ் காணும் இறை வசனம் ஆதாரமாகும்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ كُتِبَ عَلَيۡكُمُ ٱلصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى ٱلَّذِينَ مِن قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُونَ ﴾ ١٨٣ [سورة البقرة]

" விசுவாசிகளே உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்ட பிரகாரமே, உங்கள் மீதும் நோன்பு

நோற்பது விதிக்கப்பட்டிருக்கின்றது. (அதனால்) நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்."
அல் பகரா – 183.

ஹஜ் செய்வது கடமை என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿ وَلِلَّهِ عَلَى ٱلنَّاسِ حِجُّ ٱلْبَيْتِ مَنِ ٱسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلًا ۚ وَمَن كَفَرَ فَإِنَّ ٱللَّهَ غَنِىٌّ عَنِ ٱلْعَـٰلَمِينَ ﴾ ﴿٩٧﴾ [سورة آل عمران]

"எவர்கள் க.:.பதுல்லாவிற்கு யாத்திரை செல்லச்சக்தியுடையவராக இருக்கின்றார்களோ அவர்கள் மீது அல்லாஹ்விக்காக (அங்கு சென்று) அவ்வாலயத்தை ஹஜ்ஜு செய்வது கடமையாகும். எவரேனும் இதை நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்விற்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் படைப்புகளில் எந்தத் தேவையு மற்றவனாக இருக்கிறான்" ஆல இம்றான் – 97.

## இரண்டாவது நிலை...ஈமான்.

ஈமான் எழுபது சொச்சம் பிரிவுகளாக பிரிகின்றது. அதில் உயர்ந்தது லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற திருக்கலிமாவாகும்.அதில் தாழ்ந்தது பாதையில் மனிதர்களுக்கு தொல்லை கொடுக்கும் பொருட்களை அப்புறப் படுத்துவதாகும்.

மேலும் வெட்கம் என்பது ஈமானின் பிரிவுகளில் ஒன்றாகும்.
ஈமானின் கடமைகள் ஆறு...

(1) அல்லாஹ்வை நம்புவது.
(2) மலாயிக்காமார்களை நம்புவது.
(3) அல்லாஹ் இறக்கிய வேதங்களை நம்புவது.
(4) அல்லாஹ்வின் தூதர்களை நம்புவது.
(5) மறுமை நாளை நம்புவது.
(6) நன்மையும், தீமையும் கத்ர் என்னும் விதியை . பொறுத்தேயாகும் என நம்புவது.

மேல் கூறப்பட்ட ஈமானின் ஆறு கடமைகளுக்கு ஆதாரம் கீழ் காணும் இறைவசனமாகும்.

﴿ لَّيْسَ ٱلْبِرَّ أَن تُوَلُّوا۟ وُجُوهَكُمْ قِبَلَ ٱلْمَشْرِقِ وَٱلْمَغْرِبِ وَلَٰكِنَّ ٱلْبِرَّ مَنْ ءَامَنَ بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْءَاخِرِ وَٱلْمَلَٰٓئِكَةِ وَٱلْكِتَٰبِ وَٱلنَّبِيِّۦنَ ... ﴾

[سورة البقرة 177]

“மேற்கிலோ கிழக்கிலோ உங்கள் முகங்களை நீங்கள் திருப்புவது (மட்டும்) நன்மை (செய்ததாக) ஆகி விடமாட்டாது...... எனினும் (உங்களில்) எவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும், மலக்குகளையும், வேதங்களையும், நபிமார்களையும் மெய்யாகவே விசுவாசித்து செல்வத்தை அல்லாஹ்வின் விருப்பைப் பெறுவதற்காகஇனபந்துகளுக்கும்,

அநாதைகளுக்கும்,ஏழைகளுக்கும்,வழிப்போக்கர்களுக்கும், யாசகர்களுக்கும், விடுதலை விரும்பிய (அடிமைகள், கடன்காரர்கள்முதலிய)வர்களுக்கும்கொடுத்துதவிசெய்து) தொழுகையும் கடைப்பிடித்து ஸகாத்தும் கொடுத்து வருகின்றாரோ அவரும், வாக்குறுதி செய்தால் தங்கள் வாக்குறுதியைச் சரியாக நிறைவேற்றுபவர்களும், நஷ்டத்திலும் கஷ்டத்திலும் கடுமையான யுத்த நேரத்திலும் பொறுமையைக் கையாண்டவர்களும் ஆகிய இவர்கள்தான் உண்மையில் நல்லவர்கள் பயபக்தியுடையவர்கள்."

அல் பகரா –177.

விதியை நம்புவதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும் .

﴿إِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنَاهُ بِقَدَرٍ ﴿٤٩﴾﴾ [سورة القمر]

"நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் கத்ர் எனும்விதிப்படியேசிருஷ்டித்துள்ளோம்.

### மூன்றாவது நிலை ...இஹ்ஸான்

### நன்றியுடன் வணங்குதல்.

இஹ்ஸான் என்பது நீ அல்லாஹ்வைக் காண்கின்றாய் என நினைத்து அவனை வணங்குவது. அவ்வாறு நீ அவனைக்காண முடியாவிட்டாலும் அவன்

உன்னைக்கண்டு கொண்டிருக்கிறான் என்பதை உள்ளத்தில் கொண்டு அவனை வணங்குவதாகும்.
இஹ்ஸான் (என்பது ஒவ்வொருவர் மீதும்) கடமையாகும் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறைவசனமாகும்.

إِنَّ ٱللَّهَ مَعَ ٱلَّذِينَ ٱتَّقَواْ وَّٱلَّذِينَ هُم مُّحْسِنُونَ ﴿١٢٨﴾ [سورة النحل]

“நிச்சயமாக எவர்கள் (மெய்யாகவே) பய பக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுடன் எவர்கள்(பிறருக்கு) நன்றி செய்கின்றார்களோ அவர்களுடனும் தான் அல்லாஹ் இருக்கிறான்” அந்நஹ்ல் – 128.

மேலும் அல்லாஹ்வுடைய வசனமாவது ...

﴿ وَتَوَكَّلْ عَلَى ٱلْعَزِيزِ ٱلرَّحِيمِ ﴿٢١٧﴾ ٱلَّذِى يَرَىٰكَ حِينَ تَقُومُ ﴿٢١٨﴾ وَتَقَلُّبَكَ فِى ٱلسَّٰجِدِينَ ﴿٢١٩﴾ إِنَّهُۥ هُوَ ٱلسَّمِيعُ ٱلْعَلِيمُ ﴿٢٢٠﴾ ﴾

[سورة الشعراء]

“(நபியே! யாவரையும்) மிகைத்தோனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்விடமே (உம்முடைய காரியங்களை) ஒப்படைத்து விடும், (அவனோ) நீர் தனித்து வணங்க நிற்கும்போதும், அவனுக்கு சிரம் சாய்ப்பவர்களுடன் சிரம் பணிந்து வணங்க

நிலைமாறும்போது உம்மை அவன் பார்க்கிறான். நிச்சயமாக அவன் யாவற்றையும்செவியுறுவோனும் நன்கறிவோனுமாக இருக்கிறான்.”
அஷ்ஷுஃரா – 217.

﴿ وَمَا تَكُونُ فِي شَأْنٍ وَمَا تَتْلُواْ مِنْهُ مِن قُرْءَانٍ وَلَا تَعْمَلُونَ مِنْ عَمَلٍ إِلَّا كُنَّا عَلَيْكُمْ شُهُودًا إِذْ تُفِيضُونَ فِيهِۚ ... ﴾ [سورة يونس 61]

“நீங்கள் எந்த நிலையிலிந்தபோதிலும் குர்ஆனிலிருந்து நீங்கள் எந்த வசனத்தை ஓதிய போதிலும் (உங்களுடைய காரியங்களில்) நீங்கள் எதைச்செய்தபோதிலும் நீங்கள் அவற்றில் ஈடுபட்டிருக்கும்போதே உங்களை நாம் கவனிக்காமலிருப்பதுமில்லை.” யூனுஸ் – 61.

ஹதீஸிலிருந்து ஆதாரம் கீழ் காணும் ஜிப்ரீல் (அலை) அவர்களுடைய பிரபல்யமான ஹதீஸாகும்.
உமர் பின் கத்தாப் (றழி) அவர்கள் அறிவிப்பதானது.. நாங்கள் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந்தோம் . அப்போது ஒரு மனிதர் எங்கள் மத்தியில் தோன்றினார் . அவருடைய ஆடை மிக வெண்மையாக இருந்தது. அவரது முடி மிகக் கறுப்பாக இருந்தது . அவரிடம் பிரயாண அடையாளம் அசதி ஏதும் காணப்பட வில்லை . அவரை எங்களில் எவரும் இதற்கு முன் அறிந்திருக்கவுமில்லை. இம்மனிதர் பெருமானார்

முன்அமர்ந்துதன் முட்டுக்கால்களை பெருமானாரவர்களின் முட்டுக்காலுடன் சேர்த்து தன் இரு கரங்களையும் தனது இரு தொடைகள் மீது வைத்து விட்டுக் கூறினார் ..
முஹம்மதே.. இஸ்லாத்தைப் பற்றி எனக்கு அறிவித்துத் தாருங்கள் என்றார் . அப்போது நபியவர்கள் சொன்னார்கள் .. இஸ்லாம் என்பது வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராகும் என நம்பி தொழுகையை நிலை நாட்டி ஸகாத்தைக் கொடுத்து றமலான் மாதத்தில் நோன்பு நோற்று க.:.பதுல்லாவுக்குச் சென்று வர சக்தியிருந்தால் அங்கு சென்று ஹஜ்ஜூச் செய்வதாகும் என்றார்கள் .
உடனே அம்மனிதர் நீர் உண்மை சொல்லி விட்டீர் என்று கூறினார் . இவ்வாறு அம்மனிதர் நபியவர்களிடம் கேள்வி கேட்டு விட்டு அவர்களை உண்மைப்படுத்துவதைப் பார்த்து நாங்கள் ஆச்சரியமடைந்தோம் .
மேலும் அம்மனிதர் எனக்கு ஈமானைப்பற்றி சொல்லித் தாருங்கள் என்று கூறினார் .
அப்போது நபியவர்கள் கூறினார்கள் ... “அல்லாஹ்வைக் கொண்டும் அவன் மலக்குகள் வேதங்கள் மறுமைநாள் நன்மை தீமை அனைத்தும் இறைவிதியைப் பொறுத்தேயாகும் என்றும் நீ நம்புவதே ஈமானாகும் என்றார்கள் .”

மேலும் அம்மனிதர் “இஹ்ஸான்”என்றால் என்னவென்று எனக்கு அறிவித்துத்தாருங்கள் என்று கூறினார் .
“இஹ்ஸான் என்பது நீ அல்லாஹ்வைக் காண்கிறாய் என நினைத்து அவனை வணங்குவதாகும் . அவ்வாறு நீ அவனைக் காணாவிட்டாலும் அவன் உன்னைக் கண்டு கொண்டிருக்கின்றான் என்பதை உள்ளத்தில் கொண்டு அவனை வணங்குவதாகும் என பெருமானார் அவர்கள் பதிலளித்தார்கள் .

மேலும் அவர் இறுதி நாளைப்பற்றி எனக்குக் கூறுங்கள் என்றார் இதுவிடயத்தில் கேள்வி கேட்கப் பட்டவர் கேள்வி கேட்டவரை விட மிக அறிந்தவராக இல்லை என பெருமானார் அவர்கள் பதிலளித்தார்கள்.
இறுதி நாளின் அடையாளங்களை எனக்குக் கூறுங்கள் என அம்மனிதர் கூறினார். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்..

ஒரு அடிமைப் பெண் தன்தலைவியைப் பெறுவதையும், காலணியின்றி, நிர்வாணமான, ஆடு மேய்க்கின்ற ஏழைகள் பெரும் பெரும் நீண்ட கட்டடங்கள் எழுப்புவதையும் நீ பார்ப்பாயானால் அது யுக முடிவு நாளின்

அடையாளம் என்பதை நீ அறிந்துகொள்.(1)
உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்..
அந்த மனிதர் சென்ற பின்பு நாங்கள் அதிக நேரம் அமர்ந்திருந்தோம். அப்போது, உமரே! கேள்வி கேட்டவர் யார் என உங்களுக்கு தெரியுமா? என பெருமானார் (ஸல்) அவர்கள் வினவினார்கள்.
அல்லாஹ்வும் அவனது றஸூலுமே அறிவார்கள் என பதிலளித்தோம்.
இவர்தான் ஜிப்ரீல் உங்கள் மார்க்க விடயங்களை உங்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காக உங்களிடம் வந்துள்ளார். என பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

(1) அதாவது ஒரு அடிமைப் பெண் ஒரு குழந்தையைப் பெறுவாள் . இக்குழந்தை பெரியதாகி தன் தாயை தாயெனத் தெரியாமல் அவளை தன் அடிமையாக்கும் காலம் . அதாவது விபச்சாரம் தலை விரித்தாடும் காலம் .

## மூன்றாவது அடிப்படை விடயம் .

அல்லாஹ்வின் நபி முஹம்மது (ஸல்) அவர்களைப்பற்றி தெரிந்து கொள்வதாகும்.

முஹம்மது (ஸல்) அவர்கள் தந்தை பெயர் அப்துல்லாஹ்.இவர் தந்தை பெயர் அப்துல் முத்தலிப். இவர் தந்தை பெயர் ஹாஷிமாகும் ஹாஷிம் என்பவர் குறைஷி வம்சத்தைச் சார்ந்தவர். குறைஷிகள் அறபிகளாகும் அறபியர்கள் நபி இப்றாஹீம்(அலை) அவர்கள் மகன் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களின் சந்ததிகளாகும்.

முஹம்மது (ஸல்) அவர்கள் 63 ஆண்டுகள் உலகத்தில் வாழ்ந்தார்கள். நாற்பது வருடங்கள் நபித்துவத்திற்கு முன்னும், நபியான பின் 23 வருடங்களும் வாழ்ந்தார்கள்.

ஹிறா குகையில் தன் நாற்பதாவது வயதில் (இக்ர:) என்ற அத்தியாயம் இறங்கிய போது (றசூலாக) தூதராக ஆனார்கள். அவர்கள் ஊர் மக்காவாகும்.

ஷிர்க்கைவிட்டும் மக்களை எச்சரித்து, ஏக தெய்வக்கொள்கையின் பால் அழைப்பதற்காக அல்லாஹ் அவர்களை நபியாகவும் றசூலாகவும் அனுப்பினான்

இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿ يَٰٓأَيُّهَا ٱلۡمُدَّثِّرُ ۝١ قُمۡ فَأَنذِرۡ ۝٢ وَرَبَّكَ فَكَبِّرۡ ۝٣ وَثِيَابَكَ فَطَهِّرۡ ۝٤ وَٱلرُّجۡزَ فَٱهۡجُرۡ ۝٥ وَلَا تَمۡنُن تَسۡتَكۡثِرُ ۝٦ وَلِرَبِّكَ فَٱصۡبِرۡ ۝٧ ﴾

[سورة المدثر]

"(வஹீயின் அதிர்ச்சியால்) போர்த்தியிருப்பவரே! (நபியே) நீர் எழும். (மனிதர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும், உமதிறைவனைப் பெருமைப் படுத்தும், உமது ஆடைகளைதூய்மையாக வைத்துக்கொள்ளும், அசுத்தங்களை வெறுத்து விடும், (நீர் கொடுப்பதை விட) அதிகமாகப் பெறக்கருதி எவருக்கும் நன்றி செய்யாதீர். உமதிறைவனுக்காக (க்கஷ்டங்களை)நீர்பொறுத்திரும்."

அல் முத்தஸ்ஸிர் – 1,7.

"எழுந்து எச்சரிக்கை செய்யும்" என்ற திரு வசனத்தின் கருத்து என்னவெனில் ஷிர்க்கை விட்டு மக்களை எச்சரித்து, வணக்கம் அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தம் என்ற ஏக தெய்வக்கொள்கையின் பால் மக்களை அழைப்பதாகும்.

"உமதிறைவனைப் பெருமைப்படுத்தும்" என்பதன் பொருள் ஓரிரைக் கொள்கையால் அவனை கண்ணியப்படுத்தும் என்பதாகும்.

“உமது ஆடைகளை தூய்மைப்படுத்தும்” என்பதன் பொருள் உமது அமல்களை ஷிர்க்கை விட்டும் தூய்மைப்படுத்தும் என்பதாகும்.
(ரிஜ்ஸ்) என்பதன் பொருள் சிலைகள், விக்கிரகங்கள் என்பதாகும். அதாவது சிலைகளையும், அதை வணங்குகின்றவர்களையும் விட்டு விலகிக் கொள்வதாகும்.
இவ்வாறு பத்து வருடங்கள் மக்களை தவ்ஹீதின்பால் அழைத்தார்கள்.
நபித்துவம் கிடைத்து பத்து வருடங்களுக்குப் பின் மிஃறாஜ் எனும் இறை தரிசிப்பிற்காக வானுலகம் சென்றார்கள். அங்கே ஐங்காலத் தொழுகை கடமையாக்கப்பட்டது,தொழுகைகடமையாக்கப்பட்ட பின் மூன்றாண்டுகள் மக்காவில் தொழுதார்கள்.
நபித்துவம் கிடைத்துப் பதிமூன்று ஆண்டுகள் கழிந்த பின் மதீனாவிற்கு ஹிஜ்றத் செல்வதற்கு கட்டளையிடப் பட்டார்கள்.
ஹிஜ்றத் என்பது ஷிர்க் எனும் அல்லாஹ்விற்கு இணைவைப்பு நிலவி வரும் நாட்டை விட்டு இஸ்லாமிய நாட்டிற்கு மாறிச்செல்வதாகும்.
இவ்வாறு ஹிஜ்றத் செய்வது இந்த பெருமானார் (ஸல்) உம்மத்தார் மீது கடமையாகும். இது யுக முடிவு நாள்வரை நடந்து வர வேண்டிய ஒன்றாகும்.

ஹிஜ்றத் செய்வது கடமை என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறைவசனமாகும்.

﴿ إِنَّ ٱلَّذِينَ تَوَفَّىٰهُمُ ٱلْمَلَـٰٓئِكَةُ ظَالِمِىٓ أَنفُسِهِمْ قَالُوا۟ فِيمَ كُنتُمْ ۖ قَالُوا۟ كُنَّا مُسْتَضْعَفِينَ فِى ٱلْأَرْضِ ۚ قَالُوٓا۟ أَلَمْ تَكُنْ أَرْضُ ٱللَّهِ وَٰسِعَةً فَتُهَاجِرُوا۟ فِيهَا ۚ فَأُو۟لَـٰٓئِكَ مَأْوَىٰهُمْ جَهَنَّمُ ۖ وَسَآءَتْ مَصِيرًا ﴿٩٧﴾ إِلَّا ٱلْمُسْتَضْعَفِينَ مِنَ ٱلرِّجَالِ وَٱلنِّسَآءِ وَٱلْوِلْدَٰنِ لَا يَسْتَطِيعُونَ حِيلَةً وَلَا يَهْتَدُونَ سَبِيلًا ﴿٩٨﴾ فَأُو۟لَـٰٓئِكَ عَسَى ٱللَّهُ أَن يَعْفُوَ عَنْهُمْ ۚ وَكَانَ ٱللَّهُ عَفُوًّا غَفُورًا ﴿٩٩﴾ ﴾ [سورة النساء]

மார்க்கக்கட்டளைகளை சரிவர நிறைவேற்ற முடியாதவாறு நிராகரிப்போரின் நாட்டில் இருந்துகொண்டு ) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றாரோ அவர்களின் உயிரை மலக்குகள் கைப்பற்றுகின்ற போது ( அவர்களை நோக்கி, மார்க்கக்கட்டளையை நிறை வேற்ற முடியாத நாட்டில் ) நீங்கள் எவ்வாறிருந்தீர்கள்? என்று கேட்பார்கள். அதற்கவர்கள், “அந்த பூமியில் நாங்கள் பலஹீனர்களாகவே இருந்தோம்.” என்று பதில் கூறுவார்கள். (அதற்கு மலக்குகள்) அல்லாஹ்வுடைய பூமி விசாலமானதல்லவா? நீங்கள் (இருந்த) அவ்விடத்தைவிட்டு ஹிஜ்றத் செய்திருக்க வேண்டாமா?

என்று கேட்பார்கள்.இத்தகையோர் தங்குமிடம் நரகம்தான். செல்லுமிடங்களில் அது மிகக் கெட்டது. எனினும் ஆண், பெண் குழந்தைகள் ஆகியவர்களில்(மெய்யாகவே) பலஹீனமானவாக் ள். யாதொரு பரிகாரமும் தேடிக்கொள்ள சக்தியற்று (ஹிஜ்றத் செய்ய) வழி காணாமலிருந்தால் அத்தகையோரை அல்லாஹ் மன்னித்துவிடக்கூடும் . (ஏனென்றால்) அல்லாஹ் மிக மன்னிப்போனும் பிழை பொறுப்போனு மாயிர்க்கின்றான்." அந்நிஸா – 97,99.

மேலும் அல்லாஹ் கூறுவதாவது.. ﴿

يَـٰعِبَادِيَ ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِنَّ أَرۡضِي وَٰسِعَةٞ فَإِيَّـٰيَ فَٱعۡبُدُونِ ﴿٥٦﴾ ﴾ [سورة العنكبوت]

"விசுவாசம் கொண்ட என்னுடைய அடியார்களே! நிச்சயமாக என்னுடைய பூமி (மிக்க) விசாலமானது (அதில்) நீங்கள் எங்கு சென்ற போதிலும் என்னையே வணங்குங்கள்.

அல் அன்கபூத் – 56.

இமாம் பக.:.வீ (ரஹ்) கூறுகிறார்கள்..

மேற்கூறப்பட்ட இறைவசனம் இறங்குவதற்குக் காரணம் என்னவெனில், மக்காவிலுள்ள முஸ்லீம்கள் ஹிஜ்றா செய்யாமலிருந்தபோது அல்லாஹ் அவர்களை

“மூமீன்களே!” என ஈமான் என்ற பெயர் கூறி அழைத்து ஹிஜ்றத் செய்யுமாறு கட்டளையிட்டான்.
“ஹிஜ்றத்” செய்வது கடமையாகும் என்பதற்கு கீழ் காணும் பெருமானார்(ஸல்) அவர்களின் சொல்லும் ஆதாரமாகும்.
இறுதி நாளின் அடையாளமான மேற்குத்திசையிலருந்து சூரியன் உதயமாகும் நாள் வரும் வரை அல்லாஹ் தன் அடியார்களின் (தவ்பா ) வை ஏற்றுக் கொள்வான். (சூரியன் மேற்குத் திசையிலிருந்து உதயமாக ஆரம்பித்த பின் செய்யப்படும் தவ்பா அங்கீகரிக்கப் படுவதில்லை) இவ்வாறு தவ்பா எற்றுக்கொள்ளப்படாத நாள் வரும் வரை “ஹிஜ்றத்” செய்வது நடைமுறையில் இருந்து வரும்.
பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் நிரந்தரமான (இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்திய ) போது இஸ்லாத்தின் ஏனைய கடமைகளான ஸகாத், நோன்பு, ஹஜ், பாங்கு, ஜிஹாத் எனும் அறப்போர், நல்லதை ஏவி தீயதை தடுத்தல் போன்ற ஏனைய சட்டங்களைச் செய்ய கட்டளையிடப் பட்டார்கள்.
இந்த சட்டங்களை நடத்திக் காண்பிக்க பத்து ஆண்டுகள் சென்றன. பெருமானார் (ஸல்) அவர்கள் உலகை பிரியும்போது அவர்கள் நிலை நாட்டிய மார்க்கம் (அப்படியே) முழுமையாக இருந்தது. எந்த ஒரு நன்மையான காரியத்தையும் தனது உம்மத்தினர்களுக்கு

கூறாமல் செல்ல வில்லை. இவ்வாறே தீமையான எல்லா காரியங்களை விட்டும் உம்மத்தை எச்சரித்தே சென்றுள்ளார்கள். இதுவே அவர்கள் காட்டிய மார்க்கமாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிச்சென்ற நல்ல காரியம் என்னவெனில், அல்லாஹ் ஒருவனுக்கே வழிப்பட வேன்டும் என்ற தவ்ஹீதும், அல்லாஹ் விரும்பி நேசிக்கின்ற காரியங்களுமேயாகும். அவர்கள் நம்மைத் தடுத்து எச்சரித்துச்சென்ற காரியம் என்னவெனில் ஷிர்க் என்னும் இணைவைப்பும், அல்லாஹ் விரும்பாத வெறுக்கின்ற எல்லா விடயங்களுமேயாகும்.

முஹம்மது (ஸல்) அவர்களை அல்லாஹ் உலக மக்கள் அனைவர்களுக்கும் றஸூலாக அனுப்பினான். ஜின், மனித வர்க்கம் அனைவர்கள் மீதும் அவர்களுக்கு வழிப்படுவதை கடமையாக்கினான்.

இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿ قُلْ يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنِّى رَسُولُ ٱللَّهِ إِلَيْكُمْ جَمِيعًا ... ﴾

[سورة الأعراف 158]

"நபியே! நீர் கூறும்... மனிதர்களே! (நீங்கள் எத்தேசத்தவர்களாயினும்,எவ்வகுப்பினராயினும்) மெய்யாகவே நான் உங்கள் யாவருக்கும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஒரு தூதன்." அல் அ.:.றா.:.ப் – 158.

பெருமானார்(ஸல்) அவர்களைக்கொண்டு அல்லாஹ் இஸ்லாமிய மார்க்கத்தை பூர்த்தியாக்கினான்.
இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்
...ٱلۡيَوۡمَ أَكۡمَلۡتُ لَكُمۡ دِينَكُمۡ وَأَتۡمَمۡتُ عَلَيۡكُمۡ نِعۡمَتِي وَرَضِيتُ لَكُمُ ٱلۡإِسۡلَٰمَ دِينٗاۚ...﴾ [سورة المائدة 3]

"நான் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தை இன்றைய தினம் பரிபூரணமாக்கி வைத்துள்ளேன். உங்கள் மீது எனது அருட்கொடையையும் நிறைவு செய்தேன்.உங்களுக்காக இஸ்லாம் மார்க்கத்தையும் தேர்ந்தெடுத்து உங்களுக்கு அருட் செய்து அங்கீகரித்துக் கொண்டேன்."
அல் மாயிதா – 3.
முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டு பிரிந்து விட்டார்கள் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.
﴿إِنَّكَ مَيِّتٞ وَإِنَّهُم مَّيِّتُونَ ٣٠ ثُمَّ إِنَّكُمۡ يَوۡمَ ٱلۡقِيَٰمَةِ عِندَ رَبِّكُمۡ تَخۡتَصِمُونَ ٣١﴾ [سورة الزمر]

"(நபியே!) நிச்சயமாக நீரும் இறந்து விடக்கூடியவரே, நிச்சயமாக அவர்களும் இறந்து விடக்கூடியவர்கள்தான். பின்னர் மறுமை நாளில் (யாவரும்) உங்கள்

இறைவனிடத்தில் நிச்சயமாக(க் கொண்டு வரப்பட்டு) நீங்கள் (நீதியைக் கோரி உங்களுக்குள்) தர்க்கித்துக் கொள்வீர்கள்."

அஸ்ஸுமர் – 30.

மனிதர்கள் இறந்த பின்பு திரும்ப எழுப்பப்படுவார்கள் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறைவசனமாகும்.

﴿مِنْهَا خَلَقْنَاكُمْ وَفِيهَا نُعِيدُكُمْ وَمِنْهَا نُخْرِجُكُمْ تَارَةً أُخْرَىٰ ﴿٥٥﴾ ﴾

[سورة طه]

"பூமியிலிருந்தே நாம் உங்களை சிருஷ்டித்தோம். பின்னர் அதிலேயே நாம் உங்களை சேர்த்து விடுவோம். மற்றொரு தடவையும்(உயிர் கொடுத்து) அதிலிருந்து நாம் உங்களை வெளிப்படுத்துவோம்."

தாஹா – 55.

"மேலும் அல்லாஹ் கூறுவதாவது..

﴿وَاللَّهُ أَنبَتَكُم مِّنَ الْأَرْضِ نَبَاتًا ﴿١٧﴾ ثُمَّ يُعِيدُكُمْ فِيهَا وَيُخْرِجُكُمْ إِخْرَاجًا ﴿١٨﴾﴾ [سورة نوح]

அல்லாஹ்வே உங்களை (ப் புற்பூண்டைப் போல்) பூமியிலிருந்து வளரச்செய்தான், பின்னும் அதில்தான் உங்களை(மரிக்கும் படியும் செய்து அதில்) சேர்த்து

விடுவான் (அதிலிருந்தே மற்றொரு விடுத்தமும் உங்களை வெளிப்படுத்துவான்.” நூஹ் –17.

மரணத்திற்குப்பிறகு எழுப்பப்பட்ட பின் உலகில் செய்த அமல்கள் பற்றி கேள்வி கணக்குக்கேட்கப்படுவார்கள். அவர்கள் அமலுக்குத்குந்தவாறு கூலியும் கொடுக்கப் படுவார்கள்.

இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿وَلِلَّهِ مَا فِي ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِي ٱلۡأَرۡضِ لِيَجۡزِيَ ٱلَّذِينَ أَسَٰٓـُٔواْ بِمَا عَمِلُواْ وَيَجۡزِيَ ٱلَّذِينَ أَحۡسَنُواْ بِٱلۡحُسۡنَى ٣١﴾ [سورة النجم]

“வானங்கள், பூமியிலுள்ளவைகள் யாவும் அல்லாஹ்வுக்குரியனவே, ஆகவே தீமை செய்தோருக்கு அவர்களுடைய தீமைக்குத் தக்கவாறு (தீமையைக்) கூலியாகக் கொடுக்கின்றான், நன்மை செய்தோருக்கு நன்மையை கூலியாகக் கொடுக்கின்றான்.”

அந்நஜ்ம் – 31.

மரணத்திற்குப் பின் எழுப்பப்படுவதைப் பொய்ப்பிப்பவன் காபிராவான்.

இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿زَعَمَ ٱلَّذِينَ كَفَرُوٓاْ أَن لَّن يُبۡعَثُواْۚ قُلۡ بَلَىٰ وَرَبِّي لَتُبۡعَثُنَّ ثُمَّ لَتُنَبَّؤُنَّ بِمَا عَمِلۡتُمۡۚ وَذَٰلِكَ عَلَى ٱللَّهِ يَسِيرٞ ٧﴾ [سورة التغابن]

“(மரணித்த பின்னர் உயிர் கொடுத்து) எழுப்பப்பட மாட்டோம் என்று நிராகரிப்போர் எண்ணிக்கொண்டிரு க்கின்றனர் (நபியே!) நீர் கூறும், அவ்வாரன்று, என் இறைவன் மீது சத்தியமாக மெய்யாகவே நீங்கள் எழுப்பப்படுவீர்கள், நீங்கள் செய்து கொண்டிருந்தவை களைப் பற்றிப் பின்னர் நீங்கள் நிச்சயமாக அறிவுறுத்தவும் படுவீர்கள் இ(வ்வாறு செய்வ)து அல்லாஹ்வுக்கு மிக்க எளிதானதே.” அத்தகாபுன் – 7.

எல்லா றஸூல்மார்களையும் சுவர்க்கத்தைக் கொண்டு சுபசோபனம் கூறுபவர்களாகவும், நரகத்தைப்பற்றி எச்சரிக்கை செய்பவர்களாகவும் அல்லாஹ் அனுப்பினான். இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿رُّسُلًا مُّبَشِّرِينَ وَمُنذِرِينَ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَى ٱللَّهِ حُجَّةٌۢ بَعْدَ ٱلرُّسُلِ ...﴾ [سورة النساء 165]

“அல்லாஹ்வின் மீது (குற்றம் கூற ) மனிதர்களுக்கு யாதொரு வழியில்லாதிருக்கும் பொருட்டு இத்தூதர்களுக்குப் பின்னரும் (ஜகரியா, எஹ்யா போன்ற) தூதர்கள் பலரை (சுவர்க்கத்தைக் கொண்டு) நன்மாரயம் கூறுகின்றவர்களாகவும் (நரகத்தைக்கொண்டு) அச்சமூட்டி எச்சரிக்கின்றவர்களாகவும் (நாம் அனுப்பி வைத்தோம் .) அந்நிஸா – 165.

ரஸூல்மார்களில் முதல்வர் நூஹ் (அலை) அவர்களாவார்கள், அவர்களில் கடைசியானவர் முஹம்மது (ஸல்) அவர்களாகும் இவர்களே இறுதி நபியுமாகும்.

நூஹ் (அலை) அவர்கள் முதல் ரஸூலாகும் என்பதற்கு ஆதாரம் கீழ் காணும் இறைவசனமாகும்.

﴿ إِنَّآ أَوۡحَيۡنَآ إِلَيۡكَ كَمَآ أَوۡحَيۡنَآ إِلَىٰ نُوحٖ وَٱلنَّبِيِّـۧنَ مِنۢ بَعۡدِهِۦۚ ... ﴾ [سورة النساء 163]

(நபியே!) நூஹுக்கும் அவருக்கு பின்னர் வந்த நபிமார்களுக்கும் நாம் வஹீ அறிவித்தவாறே, உமக்கும் நிச்சயமாக நாம் வஹீ அறிவித்தோம். அந்நிஸா – 163.

நபி நூஹ் (அலை) அவர்கள் முதல் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் வரையுள்ள ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை (ரஸூலை) அல்லாஹ் அனுப்பி வைத்தான். இவர்கள் அல்லாஹ் ஒருவனையே வணங்கவேண்டுமென மக்களுக்கு போதித்தார்கள். “தாகூத்”என்னும் சிலைகளையும், கொடுங்கோலர்களையும் வணங்கக்கூடாது எனத்தடுத்தார்கள்.

இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறைவசனமாகும்.

﴿ وَلَقَدۡ بَعَثۡنَا فِي كُلِّ أُمَّةٖ رَّسُولًا أَنِ ٱعۡبُدُواْ ٱللَّهَ وَٱجۡتَنِبُواْ ٱلطَّٰغُوتَۖ ...﴾

[سورة النحل 36]

"(பூமியில் பல பாகங்களிலும் வசித்திருந்து) ஒவ்வொரு வகுப்பினருக்கும் நிச்சயமாக நாம் தூதரை அனுப்பியிருக்கிறோம்.( அத் தூதர்கள் அவர்களை நோக்கி ) அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள், அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படுபவைகளை விட்டும் ஒதுங்கிக் கொள்ளுங்கள் (என்று கூறினார்கள்)" அந்நஹ்ல் – 36.

அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படும் போலி தெய்வங்களை விட்டுவிட்டு அல்லாஹ்வை நம்பி விசுவாசிப்பதை அவனது அடியார்களான மனித இனம் முழுவதின் மீதும் கடமையாக்கினான்.

"அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படகின்ற ஏனைய படைப்பினங்கள், தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் 'தாகூத்' எனக் கூறப்படும்." என்று இப்னுல் கையீம் (ரஹ்) கூறினார்கள்.

"தாகூத்" என்பவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். இவர்களின் தலைவர்கள் ஐந்து பேர்...

1. அல்லாஹ்வின் சாபத்திற்கு இரையான இப்லீஸ்.
2. பிறர் தனக்கு வணக்கம் புரிவதை விரும்புபவன்.
3. தன்னைவணங்குவதற்காகமக்களைஅழைப்பவன்.
4. "கைப்" என்னும் மறைவான விடயங்களை தனக்கு . தெரியும் என வாதாடுபவன்.

5. பிரச்சனைகள் எழும்போது அல்லாஹ்வின். .
. சட்டப்படி தீர்ப்பு வழங்காமல் வேறு சட்டப்படி
6. தீர்ப்பு வழங்குபவன். (அதாவது மனிதன் இயற்றிய சட்டப்படி தீர்ப்பு வழங்கக்கூடியவன்)

இதற்கு ஆதாரம் கீழ் காணும் இறை வசனமாகும்.

﴿لَآ إِكۡرَاهَ فِي ٱلدِّينِۖ قَد تَّبَيَّنَ ٱلرُّشۡدُ مِنَ ٱلۡغَيِّۚ فَمَن يَكۡفُرۡ بِٱلطَّٰغُوتِ وَيُؤۡمِنۢ بِٱللَّهِ فَقَدِ ٱسۡتَمۡسَكَ بِٱلۡعُرۡوَةِ ٱلۡوُثۡقَىٰ لَا ٱنفِصَامَ لَهَاۗ وَٱللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ٢٥٦﴾ [سورة البقرة]

“இஸ்லாம் மார்க்கத்தில் நிர்ப்பந்தமே இல்லை, (ஏனென்றால்) வழி கேட்டிலிருந்து (விலகி) நேர் வழி (யடைவது எவ்வாறு என்பது ) தெளிவாகிவிட்டது. ஆகவே, எவன் அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படுபவைகளை நிராகரித்து விட்டு அல்லாஹ்வை விசுவாசிக்கின்றானோ அவன் நிச்சயமாக அறுபடாத பலமான ஒரு கயிற்றைப் பிடித்துக்கொண்டான். அல்லாஹ் மிக செவியுறுவோனும், மிக அறிவோனுமாக இருக்கிறான்.”

அல் பகரா – 256.

இதுவே “லாயிலாஹ இல்லல்லாஹு” என்பதின் பொருளாகும்.

ஹதீஸில் வந்துள்ளது...

## தமிழில் மூன்று அடிப்படை விடயங்கள் .

இஸ்லாம் காரியங்களின் தலையாகும், தொழுகை அதன் தூணாகும், அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவது அதன் சிகரமாகும், என பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

☆ ☆ ☆ ☆